18.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கேளம்பாக்கத்தில் அதிகபட்சமாக 23 செ.மீ. மழை பதிவு

**சென்னை :** வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக கேளம்பாக்கத்தில் 23 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதாவது,

பொன்னேரி - 15 செ.மீ. மழையும், மகாபலிபுரம் - 14 செ.மீ. மழையும், செம்பரம்பாக்கம் மற்றும் விமான நிலைய பகுதிகளில் 12 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

தமிழகத்தில் அதிகபட்சமாக கேளம்பாக்கம் 23 செ.மீ. மழை பெய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வட தமிழகம் மற்றும் ஆந்திர பகுதி மீனவர்கள், கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மைய இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

**தமிழகத்துக்கு புயல் அபாயம் இல்லை; கனமழைக்கு வாய்ப்பு: பாலச்சந்திரன்**



**சென்னை :** தமிழகத்துக்கு புயல் அபாயம் இல்லை என்றும், வட தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் கூறினார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பாலச்சந்திரன், தென்மேற்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது இன்று காலை 5 மணியளவில் சென்னையில் இருந்து வடக்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. மத்திய மேற்கு வங்கக் கடலில் ஆந்திர மாநிலம் நெல்லூருக்கு தென்கிழக்கே 120 கி.மீ. தொலைவில் நிலை கொண்டுள்ளது.

இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மற்றும் வடகிழக்கில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறும்.

இந்த புயல் சின்னம் ஆந்திரா - ஒடிசா ஒட்டிய கடற்கரையில் கரையை நோக்கி நகர்ந்து அங்கே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் தமிழகத்தில் அநேக இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வட கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை முதல் மிகக் கனத்த மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது. தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யும்.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழகத்தில் இருந்து நகர்ந்து செல்வதால் படிப்படியாக மழை குறையும் என்றும் பாலச்சந்திரன் கூறினார்.

## மதுரையில் 26 மி.மீ. மழை பதிவு

மதுரையில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 முடிந்த 24 மணி நேர நிலவரப்படி 26 மி.மீ அளவு மழை பதிவாகி உள்ளது.

திங்கள்கிழமை காலை முதல் செவ்வாய்க்கிழமை காலை வரை பெய்த மழை அளவு விபரம்(மில்லி மீட்டரில்):

மதுரை-26, டி.ஆண்டிப்பட்டி-22, சாத்தையாறு-20, மேட்டுப்பட்டி-29, கள்ளந்திரி-19, சிட்டம்பட்டி-20, புளிப்பட்டி-11.6, மேலூர்-18, தனியாமங்கலம்-20, இடையப்பட்டி-19, விரகனூர்-21 என்ற அளவில் மழை பதிவாகி உள்ளது.

## அமராவதி அணை நீர்மட்டம் உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

கோடை மழை தீவிரம் அடைந்ததை அடுத்து அமராவதி அணையின் நீர்மட்டம் கடந்த சில நாள்களாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும், நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் ஜனவரி, பிப்ரவரி ஆகிய 2 மாதங்கள் தொடர்ந்து பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்று கொண்டிருந்த நிலையில் அணையின் நீர்மட்டம் சரியத் தொடங்கியது. மேலும், இந்த

ஆண்டு வழக்கத்தைக் காட்டிலும், அதற்கு முன்னரே கோடை வெயில் தாக்கம் தொடங்கிய நிலையில் அணையின் நீர் மட்டம் அதலபாதாளத்துக்குச் சென்றது. சில்ட் என்ற டெட் ஸ்டோரேஜை கழித்து விட்டால் அணையில் வெறும் 10 அடியே நீர் இருப்பு இருந்தது.

கோடைக் காலத்தை தாக்குப் பிடிக்க முடியாமலும், குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியாத நிலையும் இருந்தது. இதனால் நூற்றுக்கணக்கான கரையோர கிராம மக்கள் கவலை அடைந்தனர். இந்நிலையில் கடந்த சில நாள்களாக நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கோடை மழையின் காரணமாக அணைக்கு நீர்வரத்து வரத் தொடங்கி, நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதனால், குடிநீர் தேவையை ஓரளவு சமாளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கரையோர கிராம மக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

அணை நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 28.38 அடி நீர்மட்டம் இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 52 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. மழை அளவு 18 மி.மீ. என பதிவாகியிருந்தது.

கோடை மழை தீவிரம் அடைந்ததை அடுத்து அமராவதி அணையின் நீர்மட்டம் கடந்த சில நாள்களாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும், நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் ஜனவரி, பிப்ரவரி ஆகிய 2 மாதங்கள் தொடர்ந்து பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்று கொண்டிருந்த நிலையில் அணையின் நீர்மட்டம் சரியத் தொடங்கியது. மேலும், இந்த ஆண்டு வழக்கத்தைக் காட்டிலும், அதற்கு முன்னரே கோடை வெயில் தாக்கம் தொடங்கிய நிலையில் அணையின் நீர் மட்டம்

அதலபாதாளத்துக்குச் சென்றது. சில்ட் என்ற டெட் ஸ்டோரேஜை கழித்து விட்டால் அணையில் வெறும் 10 அடியே நீர் இருப்பு இருந்தது.

கோடைக் காலத்தை தாக்குப் பிடிக்க முடியாமலும், குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியாத நிலையும் இருந்தது. இதனால் நூற்றுக்கணக்கான கரையோர கிராம மக்கள் கவலை அடைந்தனர். இந்நிலையில் கடந்த சில நாள்களாக நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கோடை மழையின் காரணமாக அணைக்கு நீர்வரத்து வரத் தொடங்கி, நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதனால், குடிநீர் தேவையை ஓரளவு சமாளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கரையோர கிராம மக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

அணை நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 28.38 அடி நீர்மட்டம் இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 52 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. மழை அளவு 18 மி.மீ. என பதிவாகியிருந்தது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக அணைக்கரையில் 100.4 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பதிவான மழையளவு (மில்லிமீட்டரில்):

அணைக்கரை 100.4, மதுக்கூர் 87.2, மஞ்சலாறு 70.2, பட்டுக்கோட்டை 70, திருவிடைமருதூர் 66.8, பேராவூரணி 66, கும்பகோணம் 63, பாபநாசம் 61, அய்யம்பேட்டை 55, கல்லணை 53.8, நெய்வாசல் தென்பாதி, திருக்காட்டுப்பள்ளி தலா 49.2, வெட்டிக்காடு 47.2, ஈச்சன்விடுதி 46, அதிராம்பட்டினம் 42.8, ஒரத்தநாடு 33.28, தஞ்சாவூர் 30, பூதலூர் 23.6, குருங்குளம் 6, திருவையாறு 5.5, வல்லம் 2.

மேலும், மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பகலில் பல இடங்களில் மழை பெய்தது.

## மாவட்டத்தில் பலத்த மழை: குழித்துறை ஆற்றில் வெள்ளம்

கன்னியாகுமரி மேற்கு மாவட்டப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பெய்த பலத்த மழையால் குழித்துறை தாமிரவருணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

குழித்துறை சப்பாத்து பகுதியில் தடுப்பணை கட்ட வேண்டும் என பல்வேறு தரப்பினரும் நீண்ட காலமாக கோரிக்கை வைத்ததையடுத்து, இப்பகுதியில் தடுப்பணை கட்ட தமிழக அரசு ரூ. 6.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இதைத் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் முதல் தடுப்பணை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், இப் பணிக்காக மணல் மூட்டைகளை அடுக்கியும், ஆற்றின் குறிக்கே பெருமளவு மண்ணை கொட்டியும் தடுப்புகள் அமைக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த நிலையில், குமரி மாவட்டத்தில் களியக்காவிளை, குழித்துறை, மார்த்தாண்டம் உள்ளிட்ட மேற்கு மாவட்ட பகுதிகள் மற்றும் மலையோர பகுதிகளில் செவ்வாய்க்கிழமை அதிகாலை தொடங்கி பிற்பகல் வரை தொடர்ந்து பரவலாக மழை பெய்தது. இதையடுத்து குழித்துறை தாமிரவருணி ஆற்றில் வழக்கத்துக்கும் மாறாக வெள்ளம் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து குழித்துறை சப்பாத்து பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மண் மேடுகளை பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றி வெள்ளம் பாய்ந்து செல்ல வழி ஏற்படுத்தப்பட்டது. இதனால் அங்கு அமைக்கப்பட்டு வரும் தடுப்பணை சேதமின்றி தப்பியது.

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் பிற்பகல் வரை இடைவிடாமல் மழை பெய்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால் வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர். மாலையில் சற்று மழை ஓய்ந்தாலும், வானம் தொடர்ந்து மேகமூட்டத்துடனே காணப்பட்டது.

## நெல்லை மாவட்டத்தில் 6 மணி நேரம் பெய்த மழை

திருநெல்வேலி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலையில் தொடங்கிய மழை பிற்பகல் வரை நீடித்தது. சுமார் 6 மணி நேரம் மழை பெய்தது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு மேலாக கடும் வெப்பம் நிலவி வந்தது. இதனிடையே கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையால் வெப்பம் தணிந்து காணப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 1 மி.மீ, நம்பியாறு அணையில் 6 மி.மீ. ஆலங்குளத்தில் 1.6 மி.மீ, சிவகிரியில் 2 மி.மீ, திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் தலா 1 மி.மீ, சங்கரன்கோவிலில் 4 மி.மீ மழை பதிவாகியிருந்தது. செவ்வாய்க்கிழமை காலையில் இருந்தே மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. பிற்பகல் 2 மணி வரை மழை நீடித்தது.

சாகுபடி பணிகளை தொடங்கியுள்ள நிலையில், சில தினங்களாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். ஜூன் முதல் வாரத்தில் கார் பருவ சாகுபடியை தொடங்கும் வகையில் தற்போது உழவு செய்து நாற்றுப்பாவும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் கணிசமாக நீர் இருப்பு இருப்பதால் கார் சாகுபடிக்கு ஜூன் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

நீர்வரத்து இல்லை: மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் மிதமான மழை பெய்தபோதிலும் பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து இல்லை. மணிமுத்தாறு அணைக்கு மட்டும் விநாடிக்கு 32 கனஅடி நீர்வரத்து இருந்தது. மழையால் அணைகளில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. பாபநாசம் அணையிலிருந்து 204.75 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

நீர்மட்டம்: பாபநாசம் அணை 60.75 அடி, சேர்வலாறு அணை 72.57 அடி, மணிமுத்தாறு அணை 80.25 அடி, கடனாநதி அணை 27.60 அடி, ராமநதி அணை 25 அடி, அடவிநயினார் அணை 42.50 அடி, வடக்குப் பச்சையாறு அணை 24.45 அடி, கொடுமுடியாறு அணை 2.50 அடி.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### இடைக்கழிநாடு பகுதியில் பலாப்பழ சீசன் மிக மந்தம்

எல்லையம்மன் கோவில்: செய்யூரை அடுத்த இடைக்கழிநாடு கிராம மக்களின் வாழ்வாதாரமே மா, பலா, முந்திரி பயிரிடுவது தான். முக்கனிகளில் ஒன்றான பலாப்பழ சீசன் துவங்கியுள்ள நிலையில், இந்த ஆண்டு பலாப்பழங்கள் அறுவடைக்கு தயாராகாமல் மரத்தில் பிஞ்சு நிலையிலேயே உள்ளன.

இந்த மாதம் திருவிழா காலம் என்பதால், மக்கள் தங்கள் குலதெய்வத்திற்கு, பலாப்பழங்களை படையலாக படைப்பது வழக்கம். குறைந்த அளவே பலா கிடைப்பதால், பழத்தின் விலை மிக அதிகமாக உள்ளது.

தற்போது, விற்பனைக்கு வந்துள்ள ஒரு சிறிய பழத்தின் விலை 250 ரூபாயில் இருந்து, 350 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இந்தப் பழங்கள், கடந்த ஆண்டு, 100 ரூபாய் முதல், 150 வரை விற்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

விளைச்சல் குறைவால் விலை அதிகம்

ஆண்டு தோறும் சித்திரை, வைகாசி மாதங்களில் மா, பலா பழங்கள் சீசனாக இருக்கும். கடந்த ஆண்டு மழை போதிய அளவு இல்லாவிட்டாலும் அதன் விளைச்சல் சுமாராக இருந்தது; விலையும் குறைவாக இருந்தது.

காஞ்சிபுரம் பகுதிக்கு பண்ருட்டியில் இருந்து பலாப்பழம் வருகிறது. இதை தவிர உள் மாவட்டத்தில் சில பகுதிகளிலும் பலா பழம் விளைகிறது. இருந்தும் அந்த பகுதிகளிலும் விலை அதிகமாக இருக்கிறது. காஞ்சிபுரத்தில், 250 ரூபாய் முதல், 400 ரூபாய் வரை பலாப்பழம் விற்கப்படுகிறது.

பண்ரூட்டியில் இருந்து தான் காஞ்சிபுரத்திற்கு பலாப்பழம் வருகிறது. ஒரு லோடு லாரி பழம், 35 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கிறது. நாங்கள் அவர்களிடம் இருந்து வாங்கி, மாட்டு வண்டியில் வைத்து, தெருக்களில் விற்று வருகிறோம். இப்போதைய விலைக்கு குறைவாக விற்றால் எங்களுக்கு கட்டுபடி ஆகாது. யுவராஜ், வியாபாரி, காஞ்சிபுரம்

செயற்கை முறையில் பழுக்க வைக்காத ஒரே பழம் பலாப்பழம் மட்டுமே. அடுத்த மாதம் பலாப்பழங்கள் அறுவடைக்கு தயாராகும் என எதிர்பார்க்கிறோம். சீசன் மாறி பழங்கள் பழுப்பதால், பழங்களை பூச்சி தாக்குகிறது. இதனால், விவசாயம் பாதிக்கப்படுகிறது. திருவிழா காலம் முடிந்து விடுவதால் பழங்களை விற்பனை செய்ய முடியாத நிலை உருவாகும்.
பெருமாள், கிராம தலைவர், எல்லையம்மன் கோவில்

நான் கடந்த ஆறு வருடமாக இந்த பகுதியில் பலா வியாபாரம் செய்து வருகிறேன். பலா பழங்கள் பழுக்காமல் மரத்திலேயே இருப்பதால், அதிக பழங்கள் கிடைக்கவில்லை. இதனால் விலை சற்று அதிகமாகவே உள்ளது.
லட்சுமி, பலாப்பழ வியாபாரி, எல்லையம்மன் கோவில்

## மாவட்டம் முழுவதும் 383 மி.மீட்டர் மழை

கரூர்: கரூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம், 383.20 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. வங்க கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு காரணமாக, கரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை, 7 மணி முதல் மதியம், 3 மணி வரை பரவலாக மழை பெய்தது. மழைப்பொழிவு காரணமாக வெப்பம் தணிந்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை காணப்படுகிறது. இந்நிலையில், நேற்றும் கரூர் சுற்று வட்டாரத்தில் சிறிது நேரம் மழை பெய்தது. கரூர் அடுத்த புன்னம்சத்திரம், உப்புபள்ளம் ஆகிய பகுதியில் பெய்த மழையால் சாலையில் தண்ணீர் ஓடியது. கரூர்

நகரில் லேசான மழைப்பெய்தது. கரூர் மாவட்டத்தில் மூன்று நாட்களாக பெய்யும் மழையின் காரணமாக, மாயனூர் தடுப்பணைக்கு, 200 கன அடி தண்ணீர் அதிகரித்துள்ளது. மழை அளவு மில்லி மீட்டரில், அரவக்குறிச்சி, 23.40, க.பரமத்தி, 14, குளித்தலை, 25, மாயனூர், 40, கரூர், 16, அணைப்பாளையம், 32, தோகைமலை, 70, பஞ்சபட்டி, 61.20, பாலவிடுதி, 12.20, கடவூர், 22.40, கிருஷ்ணராயபுரம், 42, மைலம்பாடி, 25 என மொத்தம், 383.20 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளதால், விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**புத்தாண்டு முதல் மழை; உழவுப்பணி துவக்கம்**

சிங்கம்புணரி: சிங்கம்புணரியில் தமிழ் புத்தாண்டுக்கு பின் பெய்த முதல் மழையை பயன்படுத்தி விவசாயிகள் ஏர் இடும் விழா நடத்தினர்.

தங்கள் நிலங்களில் உழவுப் பணியை துவக்கியுள்ளனர். முறையூர்,கிருங்காக்கோட்டை,பிரான்மலை உட்பட பல கிராமங்களில் சித்திரை தமிழ் புத்தாண்டு அன்றே தங்கள் நிலங்களில் ஏர் இடுதல் மூலம் விவசாயப் பணிகளை விவசாயிகள் துவக்குகின்றனர்.

சிங்கம்புணரி,அதற்கு தெற்கே உள்ள கிராமங்களில் சித்திரை பிறந்த பின், எப்போது முதல் மழை பெய்கிறதோ,அடுத்த சில நாட்களில் கிராமத்தின் சார்பில் நல்ல நாள் பார்த்து,ஏர்இடும் விழா நடக்கிறது. இந்தாண்டு பெய்த மழையை வைத்து, சிங்கம்புணரி, கண்ணமங்கலப்பட்டி, குமரிபட்டி, காப்பாரப்பட்டி, அணியம்பட்டி கிராம விவசாயிகள் உழவுப்பணியை துவக்கியுள்ளனர். தங்கள் குலதெய்வத்தை கும்பிட்டு,ஏர்,கலப்பையுடன் தங்கள் நிலத்திற்குச் சென்று சனி மூலையில் ஏர் பூட்டினர்.

**சாரல் மழையால் உயர்ந்த அணையின் நீர் மட்டம்**

சிவகாசி: சிவகாசி சுற்று பகுதியில் பெய்து வரும் சாரல் மழையால் ஆனைக்குட்டம் அணையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

விருதுநகரின் குடிநீர் ஆதாரமாக இருக்கும் இந்த அணை கடந்த செப்டம்பர் , நவம்பரில் பெய்த பருவ மழையில் நிரம்பியது. இதனால்

சுற்று பகுதி விவசாயம் செழித்தது. பிப்ரவரி, மார்ச்சில் நிலவிய வெப்ப தாக்கத்தினால் அணையின் நீர் மட்டம் சரிய துவங்கியது. ஒரு கட்டத்தில் 3 அடியாகி, நிலப்பரப்பு தெரிய ஆரம்பித்து.

இந்நிலையில் கடந்த மூன்று நாட்களாக சிவகாசி சுற்று பகுதியில் விடாது சாரல் மழை பெய்து வருகிறது.

இதனால் அணை சுற்று பகுதியில் இருந்து குறைந்தளவிலான தண்ணீர் வருகிறது.தொடர் நீர் வரத்து காரணமாக அணையின் நீர் மட்டம் 6.5 அடியாக உள்ளது.

பள்ளி விடுமுறை காரணமாக மாணவர்கள் அதிகளவில் அணைக்கு குளிக்க வருகின்றனர். பல இடங்களில் ஆழ்துளை கிணறு அணையின் மத்தியில் உள்ளது. இந்த ஆபத்தை உணராமல் தேக்க நீர் ஆழம் வரை சென்று குளித்து விளையாடுகின்றனர். ஆபத்தான இடங்களில் எச்சரிக்கை போர்டு வைக்க பொதுபணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தர்மபுரியில் 59.8 மி.மீ மழை

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், தர்மபுரி நகரில் லேசான சாரல் மழை மட்டும் பகல் 12 மணி முதல் பெய்தது. அரூரில் 19.3 மி.மீ, பாப்பிரெட்டிப்பட்டியில் 36.8 மி.மீ, பாலக்கோடில் 2.3 மி.மீ, ஒகேனக்கல்லில் 1.4 மி.மீ, என மொத்தம் 59.8 மி.மீ மழை பெய்தது. சரசாரியாக 8.54 மி.மீ மழை பெய்துள்ளது. நேற்றும் காலை முதல் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. நகரில் நேற்று காலை 9 மணி முதல் இரவு வரை சாரல் மழை தொடர்ந்து பெய்தது.

## பருப்பு வகைகளை கிலோ ரூ120க்கு மேல் விற்கக்கூடாது ராம்விலாஸ் பஸ்வான் வேண்டுகோள்

பாட்னா, : பருப்பு வகைகளை மத்திய அரசு மானிய விலையில் சப்ளை செய்வதால், இவற்றை மாநிலங்கள் கிலோ ரூ120க்கு மேல் விற்க வேண்டிய அவசியமில்லை; விற்கவும் கூடாது என ராம்விலாஸ் பஸ்வான் கூறினார்.

பருப்பு வகைகள் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இதையடுத்து, பருப்பு வகைகளை பதுக்கி வைப்போர் மீது நடவடிக்கை எடுத்த மத்திய அரசு, நாடு முழுவதும் பதுக்கல் பருப்பு வகைகளை பறிமுதல் செய்தது. இதை பின்னர் மாநிலங்கள் மூலம் விநியோகம் செய்து விலைகை சற்று கட்டுக்குள் கொண்டு வந்தது.

இந்நிலையில், மத்திய உணவுத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் பாட்னாவில் ஒரு கருத்தரங்கில் பேசியதாவது:

மத்திய அரசு துவரம்பருப்பு கிலோ ரூ60, உளுத்தம்பருப்பு கிலோ ரூ82 என்ற விலையில் மாநிலங்களுக்கு வழங்க தயாராக இருக்கிறது. இவற்றை மில்களுக்கு கொண்டு சென்று உடைத்தெடுத்து விற்பனைக்கு அனுப்புவது வரை உள்ள செலவு சொற்பம்தான். இதில் எப்படி கணக்கிட்டாலும் கிலோ ரூ120க்குள்தான் வரும்.

எனவே, பருப்பு வகைகளை கிலோ ரூ120க்கு மேல் மாநில அரசுகள் விற்பனை செய்யக்கூடாது. அப்படி விற்றால் அதற்கு மாநில அரசுகள்தான் காரணம். பருப்பு விலையை கட்டுப்படுத்த உணவு அமைச்சகம் 55,000 டன் பருப்பு வகைகளை இருப்பு வைத்துள்ளது. இதில் 26,000 டன் இறக்குமதி செய்யப்பட்டவை. ஆனாலும், பருப்பு விலை உயர்வதற்கு பதுக்கல்தான் காரணம். சட்டவிரோதமாக 87,000 டன் பருப்பு மகாராஷ்டிராவிலும், 23,000 டன் பருப்பு கர்நாடகாவிலும் சமீபத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ரேஷன் கடைகள் கணினிமயம்

பொது விநியோக திட்டத்தின் கீழ் மானிய விலையில் உணவு பொருட்கள் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. 17 முதல் 18 மாநிலங்களில் ரேஷன் கடைகள் கணினி மயமாக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பீகாரில் படு மோசமாக 0.006 சதவீத ரேஷன் கடைகள்தான் கணினி மயமாக்கப்பட்டுள்ளன என்றார். உணவு மற்றும் நுகர்வோர் விவகார செயலாளர் பிருந்தா ஸ்வரூப் கூறுகையில், ''நாட்டின் தற்போதைய உணவு இருப்பு 516 லட்சம் மெட்ரிக் டன்களாக உள்ளது'' என்றார்.

## 20 ஆண்டில் இல்லாத அளவு காபி உற்பத்தி சரியும் அபாயம்

புதுடெல்லி, : உலக அளவில் காபி உற்பத்தியில் 6வது இடத்தில் இருக்கிறது இந்தியா. காபி உற்பத்தியில் சிறந்த நாடுகளில் ஒன்றான பிரேசிலில் உற்பத்தி சரிந்திருக்கும் நேரத்தில், இந்திய காபி உற்பத்தியிலும் பின்னடைவு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.இதற்கு முக்கிய காரணம், போதுமான மழைப்பொலிவு இல்லாததுதான். ''மழை குறைவு என்பதோடு, வறட்சியும் சேர்ந்து கொண்டதால் உற்பத்தி கடுமையாக சரிந்து விட்டது. குறிப்பாக பூ விடும் நேரத்தில் ஏற்பட்ட வறட்சி பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. இதனால் 25 சதவீத உற்பத்தி குறையும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தியாவின் மொத்த காபி உற்பத்தியில் கர்நாடகாவின் பங்கு சுமார் 70 சதவீதமாக இருக்கிறது. ஆண்டுக்கு சராசரியாக 3.5 லட்சம் டன் காபி உற்பத்தி செய்யப்படும்.

ஆனால் 25 சதவீத உற்பத்தி குறைந்தால் நடப்பு ஜூன் 2016-17 பருவத்தில் உற்பத்தி 2.63 லட்சம் டன்களாக சரிந்து விடும். இது 1998-99 ஆண்டுக்கு பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய உற்பத்தி சரிவாக இருக்கும்'' என காபி வாரிய அதிகாரிகள் சிலர் தெரிவிக்கின்றனர். நடப்பு காபி உற்பத்தி சீசன் வரும் செப்டம்பர் 30ம் தேதியுடன் முடிவடைகிறது. மார்ச் - முதல் மே வரை தென்னிந்தியாவில் மழை சராசரியை விட குறைவாக இருக்கும்

என்று கணிக்கப்பட்டுள்ளதால், உற்பத்தி இழப்பை தடுப்பது கடினம்தான் என காபி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறுகின்றனர். நடப்பு சந்தை ஆண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 19.4 சதவீதம் அதிகரித்து 2,13,187 டன்களாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

**உடல் சோர்வை போக்கும்**




கோடைகாலத்தில் ஏற்படும் சோர்வு, உடல் உஷ்ணத்தை போக்கும் மாம்பழத்தை பயன்படுத்தி குழந்தைகள் விரும்பி சாப்பிடும் உணவு தயாரிக்கலாம். மாம்பழத்தின் தோலை நீக்கிவிட்டு அரைத்து எடுக்கவும். இதனுடன் ஏலக்காய் தட்டி போடவும். சிறிது சுக்குப் பொடி, நாட்டு சர்க்கரை சேர்க்கவும்.

இதை நன்றாக கலந்து குளிரவைத்து கொடுத்தால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். கோடைகாலத்தில் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் சோர்வு ஏற்படும். மாம்பழம் சோர்வை நீக்குகிறது. மாம்பழம் சத்தூட்டமான உணவாக விளங்குகிறது. அதிகம் சாப்பிட்டால் உஷ்ணம் ஏற்படும் என்பதால் சுக்கு, நாட்டு சர்க்கரை சேர்த்து சாப்பிடுவதால் ஆரோக்கியமான உணவாக அமைகிறது.

செம்பருத்தி பூக்களை பயன்படுத்தி சோர்வை நீக்கும் பானம் தயாரிக்கலாம். செம்பருத்தி பூக்களின் இதழ்களை வெந்நீரில் அலசி அரைத்து எடுக்கவும். இதனுடன் பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர்

நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டியபின், காய்ச்சி ஆறவைத்த பால் சேர்க்கவும். இது, குழந்தைகளுக்கு ஏற்படும் சோர்வை நீக்கும். செம்பருத்தியை தேனீராக்கி அன்றாடம் குடிப்பதால் இதயம் பலப்படும். மாரடைப்பு வராமல் தடுக்கிறது.

இதய அடைப்பை போக்குகிறது. ரோஜா பூவை பயன்படுத்தி வயிற்று பிரச்னைக்கான மருந்து தயாரிக்கலாம். புளிப்பில்லாத தயிரை அரைத்து எடுக்கவும். இதனுடன், பன்னீர் ரோஜா இதழ்களுடன் பனங்கற்கண்டு சேர்த்து அரைத்து எடுக்கப்பட்ட பசையை சேர்க்கவும். நன்றாக கலந்து குளிர வைத்து குழந்தைகளுக்கு கொடுக்கலாம். இது, சோர்வை நீக்குவதுடன், வயிற்றுபோக்கு பிரச்னையை தடுக்கும் மருந்தாகிறது. இதயத்தை பலப்படுத்துகிறது. குளிர்ச்சியை தரும். ரோஜா அற்புதமான மருந்தாகிறது. இதன் மணம் புத்துணர்வை தருகிறது.

சந்தனத்தை பயன்படுத்தி குழந்தைகளுக்கு ஏற்படும் சோர்வு, உஷ்ணத்தை தணிக்கும் பானம் தயாரிக்கலாம். பனங்கற்கண்டை நீர்விட்டு கரைத்து எடுக்கவும். இந்த கரைசலை கெட்டியாகும் வரை கொதிக்க வைத்து சந்தனப்பொடி சேர்த்து கலக்கவும். பாகு பதத்தில் வந்தவுடன் ஆறவைத்து பாட்டிலில் எடுத்து வைக்கவும்.

தேவையானபோது நீர்விட்டு கலந்து கொடுக்கலாம். இதனால் உடல் உஷ்ணம் தணியும். சந்தனம் உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. இதயத்துக்கு பலத்தை கொடுக்கிறது. வெயில் காலத்தில் அதிக வியர்வை வெளியேறுவதால் ரத்த அழுத்த குறைபாடு ஏற்படும். இந்நிலையில், சந்தனம் ரத்த ஓட்டத்தை சீர்செய்கிறது. சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலை போக்குகிறது.

மாம்பழம்

**ஆரோக்கியப் பெட்டகம்: மணத்தக்காளிக்காய்**



மணத்தக்காளிக் கீரை வாங்கும் போது, அதில் கொத்துக் கொத்தாக பச்சை மற்றும் கருப்பு நிறத்தில் அதன் காய்களும் பழங்களும் இருப்பதைக் கவனித்திருக்கலாம். கீரையை மட்டும் கிள்ளி எடுத்துவிட்டு, அந்தக் காய்களையும் பழங்களையும் அப்புறப்படுத்துபவரா நீங்கள்? அப்படியானால் உங்கள் ஆரோக்கியத்தைக் காக்க கையில் கிடைத்த அரிய வாய்ப்பை நீங்கள் தூக்கி எறிகிறீர்கள் என்றே அர்த்தம்.

ஆமாம்... மணத்தக்காளிக் கீரையின் மகத்துவம் தெரிந்த உங்களுக்கு அதன் காய் மற்றும் பழங்களின் அருமையும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். கீரைக்குக் கொஞ்சமும் சளைத்ததல்ல அதன் காய். அது பழுத்து கருப்பாகும். அந்தப் பழங்களை அப்படியே வெறும் வாயில் மென்று தின்னலாம். சுவையாகவும் இருக்கும். மணத்தக்காளிக் காயின் மருத்துவ மகிமைகளைப் பட்டியலிடுவதோடு, அந்தக் காயை ைவத்து சூப்பரான மூன்று ஆரோக்கிய உணவுகளையும் செய்து காட்டுகிறார் ஊட்டச்சத்து நிபுணர் அம்பிகா சேகர்.

மணத்தக்காளிக் கீரை வருடம் தோறும் கிடைப்பது போலவே அதன் காயும் கிடைக்கும். சில நேரங்களில் அந்தக் காயை மட்டும் தனியே

விற்பார்கள். பச்சை மணத்தக்காளிக் காயை பல வகைகளில் சமையலில் சேர்க்கலாம். சுவையும் பிரமாதமாக இருக்கும்.

இயற்கை மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் சருமப் பிரச்னைகள், ஆஸ்துமா மற்றும் காய்ச்சலை குணப்படுத்த மணத்தக்காளிக் காய் பயன்படுகிறது.

உடலில் இருந்து கழிவுப்பொருட்களை பிரித்தெடுக்க உதவுகிறது.வாய்ப்புண் இருக்கும்போது 4 இலைகளை அதன் காய்களுடன் மென்று அல்லது சாறு எடுத்து உட்கொண்டால் புண் ஆறிவிடும்.

மணத்தக்காளி இலையையும் காய்களையும் விழுதாக அரைத்து தீப்புண் பட்ட இடத்தில் போட்டால் காயம் மறையும்.மணத்தக்காளிக் காய் குடல்புழுக்களை வெளியேற்றுகிறது.

நுரையீரல் நோய்களை போக்குவதில் பூவும் காயும் பயன்படுகிறது. கண் மற்றும் தசைப் பகுதிக்கு நல்ல சக்தி தரும். தலைவலி, குடல்புண் மற்றும் சரும நோய்களுக்கு நல்ல மருந்தாகும். சிறுநீரகக் கோளாறுக்கும் சிறந்த மருந்து. மலச்சிக்கல் மற்றும் மன உளைச்சலுக்கு சிறந்தது.

வயிற்றில் ஏற்படும் அனைத்து கோளாறுகளையும் இந்த இலையும் காயும் குணப்படுத்தும். சீதபேதி மற்றும் அஜீரணக் கோளாறுக்கு பயனுள்ளது. மணத்தக்காளிக்காயை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உடல் சூடு தணியும்.

மணத்தக்காளிப்பழம் கர்ப்பிணிகளுக்கு மிகவும் நல்லது. கருவைப் பலப்படுத்தும் தன்மை கொண்டது. மணக்கக்காளிக் கீரையை அதன் காய் மற்றும் பழங்களுடன் சேர்த்து இடித்து எடுத்த சாற்றை அடிக்கடி எடுத்துக் கொண்டால் கல்லீரல் மற்றும் கணைய வீக்கம் சரியாகும்.

**ஹெல்த்தி ரெசிபி**

**மணத்தக்காளிக்காய் சட்னி**

**என்னென்ன தேவை?**

மணத்தக்காளிக்காய் - 100 கிராம், உளுந்து - 20 கிராம், இஞ்சி - 1 துண்டு, பச்சைமிளகாய் - 2-3, தேங்காய் -
10 கிராம், உப்பு - தேவையான அளவு, பெருங்காயம், மல்லி இலை, கறிவேப்பிலை - சிறிதளவு, எண்ணெய் -
1 டீஸ்பூன், புளி - 5 கிராம்.

**எப்படிச் செய்வது?**

மணத்தக்காளிக் காய், உளுந்து, பச்சைமிளகாய், இஞ்சி இவை அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக எண்ணெய் ஊற்றி வதக்கி உப்பு, புளி, மல்லி, கறிவேப்பிலை, தேங்காய் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். சிறு கசப்பு இருந்தால் ஒரு சிட்டிகை சர்க்கரை சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

**மணத்தக்காளி வத்தல் குழம்பு**

**என்னென்ன தேவை?**

மணத்தக்காளி வத்தல் - 50 கிராம், புளி - எலுமிச்சைப்பழ அளவு, சாம்பார் வெங்காயம் - 50 கிராம், தக்காளி சிறியது - 1, கறிவேப்பிலை - சிறிது, மிளகாய்த்தூள் - 3 டீஸ்பூன், பூண்டு பற்கள் - 10, மஞ்சள்த்தூள் - சிறிது, உப்பு -
தேவையான அளவு. தாளிக்க...கடுகு, வெந்தயம், நல்லெண்ணெய் - 2 டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

புளியை கரைத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். பிறகு கடுகு, வெந்தயம், மணத்தக்காளி காய்ந்த வத்தல் நன்றாக வறுத்து பின் பூண்டு, கறிவேப்பிலை, உப்பு, வெங்காயம், தக்காளி சேர்த்து வதக்கி பின் மிளகாய்த்தூள், மஞ்சள்த்தூள் சேர்த்து வதங்கியதும் புளிக்கரைசலை சேர்த்து நன்றாக கொதிக்க விடவும். பிறகு 1 டீஸ்பூன் நல்லெண்ணெய் சேர்த்து இறக்கவும்.

**மணத்தக்காளிக்காய் கூட்டு**

**என்னென்ன தேவை?**

வேகவைத்த துவரம்பருப்பு - 1 கப், மணத்தக்காளிக் காய் - 100 கிராம், மணத்தக்காளிக் கீரை - 1 பிடி, பச்சைமிளகாய் - 3, பூண்டு - 10 பற்கள், தக்காளி - 1, வெங்காயம் - 1, மஞ்சள்த்தூள், உப்பு - தேவையான அளவு.

**தாளிக்க...**

எண்ணெய் - 1 டீஸ்பூன், கடுகு அல்லது வடகம் - சிறிது, காய்ந்த மிளகாய் - 2.

**எப்படிச் செய்வது?**

மணக்கக்காளிக்காய், கீரை, பூண்டு, பச்சைமிளகாய், வெங்காயம், உப்பு, தக்காளி அனைத்தையும் சிறிதளவு மஞ்சள்த்தூள் சேர்த்து வேக வைக்கவும். வெந்ததும் வடகம், காய்ந்த மிளகாயை எண்ணெய் ஊற்றி தாளித்து கொட்டி வேக வைத்த பருப்பையும் சேர்த்து கடைந்து சூடாக பரிமாறவும்.

**மணத்தக்காளி வற்றல் செய்வது எப்படி?**

பழுக்காத மணத்தக்காளிக் காய்களைப் பறித்து சுத்தம் செய்யவும். உப்பு சேர்த்த மோரில் அந்தக் காய்களை ஊற வைத்து, வெயிலில் உலர்த்தி நன்கு காய்ந்ததும் எடுத்து வைத்துக் கொள்ளவும். இந்த வற்றலை வைத்து

குழம்பு செய்யலாம். அப்படியே சிறிது எண்ணெயில் வறுத்துப் பொடித்து, சூடான சாதத்தில் பிசைந்து சாப்பிட, வயிற்றில் உள்ள கிருமிகள் அழிந்து வயிறு சுத்தமாகும். தினமும் இப்படி சாப்பிட்டு வர நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கும். ஆஸ்துமா மற்றும் காச நோயும் கட்டுக்குள் வரும்.

**மணத்தக்காளி பச்சடி**

மணத்தக்காளிக் காய் மற்றும் பழங்களைக் கழுவி சுத்தம் செய்து, அவற்றுடன் தயிர், உப்பு, பொடியாக நறுக்கிய பச்சைமிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி, இஞ்சித் துருவல் சேர்த்து அப்படியே சாப்பிடலாம். கோடைகாலத்தில் அடிக்கடி எடுத்துக் கொண்டால் உடலுக்குக் குளிர்ச்சி. வயிற்றுப் புண்களும் வாய்ப்புண்களும் வராமல் இருக்கும்.

**என்ன இருக்கிறது?**

**மணத்தக்காளிக்காயின் சத்துப்பட்டியல் (100 கிராம் அளவில்)**

புரதம் - 5.9 கிராம்
கொழுப்புச்சத்து - 1 கிராம்
மாவுச்சத்து - 8.9 கிராம் ஆற்றல் - 68 கிலோ கலோரிகள்
கால்சியம் - 410 கிராம்
இரும்புச்சத்து - 20.5 கிராம்
அஸ்கார்பிக் அமிலம் - 11 மி.கி.
நையாசின் - 1.0 கிராம்
தயாமின் - 0.05 கிராம்

**மூலிகை மந்திரம் நாவல்**



இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு என முச்சுவைகளும் கலந்த கனியான நாவலை விரும்பாதவர்களே இருக்க முடியாது. கற்பூர மணமும் கருநீல நிறமும் கொண்ட தனிக்தன்மை மிக்கது நாவல் பழம் என்பதைப் போலவே அதன் மருத்துவ குணங்களும் தனித்தன்மை கொண்டவையே.வாருங்கள்… இந்த இதழில் நாவல் பழத்துடன் நாவல் மரத்தின் சக்தியையும் அறிந்து கொள்வோம்.

எங்கும் காணக்கூடிய மரமான நாவல், 80 அடி உயரம் வரையிலும் கூட வளரக்கூடிய ஒரு மரமாகும். இதன் இலைகள் சற்று நீளமாகவும், பூக்கள் வெண்மை நிறத்தில் சிறிதாகவும் இருக்கும். Syzygum cumini என்பது நாவல் மரத்தின் தாவரப் பெயர். Black plum என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். வடமொழியில் மஹாபலா என்றும் அரபு மொழியில் ஜாமூன் என்றும் குறிப்பிடுவதுண்டு.

**நாவலில் இருக்கும் வேதிப் பொருட்கள்**

நாவல் பழத்தில் எரிசக்தி, மாவுச்சத்து, நீரில் கரையக்கூடிய நார்ச்சத்து, கொழுப்புச்சத்து, புரதச்சத்து, வைட்டமின் சத்துகளான தயாமின், ரிபோஃப்ளேவின், நியாசின், வைட்டமின் சி ஆகியவற்றோடு தாதுப் பொருட்களான சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து, மெக்னீசியம்,

பாஸ்பரஸ், பொட்டாசியம், உப்பு, நீர்ச்சத்து ஆகியனவும் மிகுதியாக அடங்கி உள்ளன.

நாவல் பழத்தின் இலைகளிலும் புரதச்சத்து, கொழுப்புச்சத்து, நார்ச்சத்து, சாம்பல் சத்து, சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ் ஆகியன அடங்கியுள்ளன. நாவல் இலைகள் நுண் கிருமிகளைப் போக்கக்கூடிய வலிமை கொண்டவை என்கிறார்கள் நவீன ஆய்வாளர்கள். ஆயுர்வேதம், யுனானி, சீன மருத்துவம், சித்த மருத்துவம் ஆகியவற்றில் நாவல் பழத்தின் கொட்டைகளைப் பெரிதும் பயன்படுத்துகிறார்கள்.

முக்கியமாக, சர்க்கரைநோயை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக நாவல் பழக் கொட்டைகள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. நாவல் பழம் சிறுநீரை பெருக்கும் என்பதைப் போல, நாவல் பழத்தின் கொட்டைகள் சிறுநீரைக் குறைக்கும் தன்மை கொண்டது. பேதியை நிறுத்தவும், ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்தவும் நாவல் பழக்கொட்டைகள் பயன்படுத்தப்படுகிறது.

நாவல் மரத்தின் பட்டையும் பல மகத்துவம் கொண்டது. பட்டையைத் தீநீர் இட்டு வாய் கொப்புளித்தால் வாய்ப்புண் ஆறும். புண் உள்ள இடத்தில் விட்டுக் கழுவினால் புண்கள் விரைவில் ஆறும். ரத்த அழுத்தத்தையும் வாய்ப்புண்களையும் தொண்டைப் பகுதியிலுள்ள மென் திசுக்களில் ஏற்பட்ட புண்களையும் குணமாக்கக்கூடியது.
'ஆசிய நோய் காசம் அசிர்க்கரஞ்சுவாசவினை

கேசமுறு பால கிரகநோய் – பேசரிய

மாவியங்க லாஞ்சனமிவ் வன் பிணி யெலாமேகும்

நாவலுற பட்டையத னால்'

- என்கிறது நாவல் பற்றிய அகத்தியர் குணபாடம்.நாவல் பட்டையினால் வாய்ப்புண்கள், பல் நோய்கள், இருமல், அதிக குருதிப்போக்கு, 'பாலகிரக நோய்' எனப்படும் குழந்தைகளைப் பற்றிய தோஷங்கள்,

வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் எல்லாம் விலகிப் போகும் என்பது மேற்கண்ட பாடலின் பொருள் ஆகும்.இன்னொரு பாடலில், நாவல் மரத்தின் வேரை மருந்தாகப் பயன்படுத்தும்போது வாதநோய்கள் விலகிப் போகும், சரும நோயின் தொல்லை போகும், எவ்வித ரணமாக இருந்தாலும் விரைவில் ஆறும், கடுமையான காய்ச்சலும் பால்வினை நோய்களும் பறந்து போகும் என்று குறிப்பிடுகிறார் அகத்தியர்.

**நாவலின் மருத்துவசெயல்கள்**

நாவல் பழம் வயிறு தொடர்பான பல கோளாறுகளைத் தீர்க்கக் கூடியது. வாயுத் தொல்லைகள், சிறுநீர்த் தேக்கம், சீத ரத்த பேதியை நிறுத்தக்கூடியது. நாவல் மரப்பட்டை மற்றும் விதைகளுக்கும் பேதியை நிறுத்தும் ஆற்றல் உண்டு. எருக்கட்டு, மலச்சிக்கல், கணையம் சம்பந்தமான நோய்கள், வயிற்றில் ஏற்படும் காற்று மற்றும் அமிலத்தன்மை ஆகியவற்றையும் குணமாக்கும் தன்மை நாவலின் மொத்தப் பகுதிகளுக்கும் உண்டு என ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன.

இந்திய ஆயுர்வேத நூல்கள் நாவல் பட்டையை பேதி, ரத்தக்கசிவு ஆகிய நோய்களுக்கும் விதைகளை ரத்தத்தின் சர்க்கரை அளவைக் குறைப்பதற்கும், அடிக்கடி சிறுநீர் கழிப்பதை தடுப்பதற்கும் பரிந்துரை செய்கின்றன. நவீன ஆய்வுகளின் மூலம் நாவல் கொட்டை மூட்டுவலிகளை போக்கக்கூடியது, காய்ச்சலைப் போக்கக்கூடியது, வலியை விரட்டக்கூடியது என தெரிய வந்துள்ளது.

நாவல் விதைகளைப் பொடித்து அதனின்று பெறப்பட்ட சத்துவத்தை சூரணமாகவோ, தீநீராகவோ தினம் 2 அல்லது 3 வேளைகள் கொடுத்து பரிசோதித்ததில் பலருக்கு ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவும், சிறுநீரில் வெளியேறும் சர்க்கரையின் அளவும் குறைந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**நாவல் மருந்தாகும் விதம்**

நாவல் இலையை கொழுந்தாகத் தேர்ந்தெடுத்து சாறு பிழிந்து ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து அதனோடு ஒரு ஏலக்காய், சிறிதளவு லவங்கப்பட்டை தூள் ஆகியன சேர்த்து காலை, மாலை என இரண்டு வேளைகள் உள்ளுக்குக் கொடுத்து வர அஜீரணம், வயிற்றுப்போக்கு ஆகியன குணமாகும்.

பட்டையைதீநீரிட்டுக் குடிப்பதால் சீதபேதி குணமாகும். நாவல் பழத்தை நசுக்கி வாலையில் இட்டு வடித்து எடுக்க ஒருவித பசுமை நிறம் கொண்ட எண்ணெய் கிடைக்கும். இந்த எண்ணெய் குடற்புண்களைப் போக்கக் கூடியதாகவும் ஜீரணக் கோளாறுகளை சீர் செய்வதாகவும் அமையும்.

நாவல் பட்டை சூரணத்தை நீரில் இட்டு நன்கு கொதிக்க வைத்து நீர் சுண்டி, குழம்பு பதத்தில் வரும்போது எடுத்து ஆற வைத்து மேல் பூச்சாக, பற்றாகப் போட்டு வருவதால் வாத நோய் தணியும், வலியும் குறையும்.

நாவல் பழச்சாறு ஒரு தேக்கரண்டி, தேன் மற்றும் நெல்லிச்சாறு இவை இரண்டையும் சம அளவாகச் சேர்த்து அன்றாடம் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வருவதால் உடல் சோர்வு போகும். ரத்தசோகை குணமாகும், ஞாபக சக்தி அதிகரிக்கும். அடிக்கடி நாவல் பழத்தை உண்ணுவதால் நுரையீரல் தூண்டப்பட்டு சீராக செயல்படும். சிறுநீர்ப்பை கோளாறுகளும் நீங்கும்.

நாவல் இலைக் கொழுந்து, மாவிலைக் கொழுந்து இவை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து புளிப்பில்லாத புதிய தயிரில் கலந்து உள்ளுக்குக் கொடுப்பதால் சீதபேதி, ரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு, சிறுநீர் எரிச்சல் ஆகியன குணமாகும். நாவல் மரப்பட்டையைத் தூள் செய்து நீரில் இட்டுக் கொதிக்க வைத்து வாய்க் கொப்புளிப்பதால் வாயில் ஏற்பட்ட புண்கள், பல் சொத்தை, ஈறுகளின்

வீக்கம் ஆகியன குணமாகும். இதே நீரைக் கொண்டு புண்களைக் கழுவுவதால் விரைவில் புண்கள் ஆறும்.

நாவல் மரப்பட்டைச்சாறு புதிதாக எடுத்து அதனுடன் வெள்ளாட்டுப்பால் சேர்த்து குழந்தைகளுக்குப் புகட்ட குழந்தைகளை பற்றிய அதிசாரபேதி குணமாகும். நாவல் விதையை சூரணித்து வேளைக்கு 4 கிராம் என இருவேளை தொடர்ந்து கொடுத்து வருவதால் சர்க்கரைநோய் குணமாகும்.

நாவல் விதை சூரணத்தோடு மாம்பருப்பு சூரணமும் சம அளவு சேர்த்து தினம் இரு வேளை கொடுத்து வர சிறுநீரைப் பெருக்கும்.இத்துணை நற்பலன்களையும் தரும் நாவல் மரத்தை, 'நலம் செய்யும் நல்லதோர் மரம்' என்று எப்போதும் மனதில் நிறுத்திப் பயன்பெறுவோம்.

**கொப்பரை விலை வீழ்ச்சி**

கோவை : கொப்பரை உற்பத்திக்கு தேவையான வெயில் கடந்த 3 நாட்களாக இல்லாததால், கோவை மாவட்டத்தில் உள்ள 100க்கு மேற்பட்ட கொப்பரை களங்கள் இயங்கவில்லை. இதனால் அவற்றை தேங்காயாக விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தேங்காய் விற்பனைக்கு வரத்து, வழக்கத்தை விட அதிகரித்துள்ளதால், அவற்றை ரூ.9க்கு கொள்முதல் செய்து வந்த வியாபாரிகள், ரூ.7க்கு கொள்முதல் செய்கின்றனர். கொப்பரை உற்பத்தியும் பாதிக்கப்பட்டு, தேங்காய் விலையும் சரிவடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**குறுவை சாகுபடிக்காக 1,227 டன் யூரியா குடந்தை வருகை**

கும்பகோணம், : குறுவை சாகுபடிக்காக கும்பகோணம் ரயில் நிலையத்துக்கு 21 வேகன்களில் 1,227 டன் யூரியா வந்தது. சென்னையில் உள்ள தனியார் உர நிறுவனத்திலிருந்து குறுவை சாகுபடிக்காக கும்பகோணம் ரயில் நிலையத்துக்கு 21 ரயில் வேகன்களில் 1,227 டன் யூரியா,நேற்று வந்தது. இந்த யூரியா உரத்தை

குறுவை சாகுபடிக்காக தஞ்சை, திருவாரூர், நாகை, அரியலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள தனியார் உரம் விற்பனை நிலையத்துக்கு லாரிகளின் அனுப்பி வைக்கப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக அணைக்கரையில் 100 மி.மீட்டர் மழை பெய்தது**



தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதையொட்டி அதிகபட்சமாக அணைக்கரையில் 100 மி.மீட்டர் மழை பெய்தது.

வாகன ஓட்டிகள் அவதி

தஞ்சை மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. இதனால் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். இந்தநிலையில் வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிய மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர். தஞ்சையில் நேற்றுகாலை முதல் மேகமூட்டமாக காணப்பட்டது. அவ்வப்போது மழை தூறியது. இந்த மழையின் காரணமாக பூமி குளிர்ந்து குளிர்ந்த காற்றுவீசுகிறது. தஞ்சை மேரீஸ்கார்னர் பகுதியில் ரெயில்வே மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

அந்த வழியாக பஸ், லாரிகள் செல்ல தடைவிதிக்கப்பட்டு இருந்தாலும் மினிபஸ், ஷேர்ஆட்டோ, மோட்டார் சைக்கிள்கள் செல்வதற்கு தடை விதிக்கப்படவில்லை. இதனால் நாஞ்சிக்கோட்டை பகுதிக்கு செல்பவர்களும், அங்கிருந்து வருபவர்களும் மேரீஸ்கார்னர் பகுதியின் வழியாகவே வந்து செல்கின்றனர். பாலம் கட்டும் பணி நடைபெறுவதால் அந்த பகுதியில் குண்டும், குழியுமாக காட்சிஅளிக்கிறது. தற்போது பெய்து வரும் மழையினால் அந்த பகுதியில் தண்ணீர் தேங்குவதுடன் சேறும், சகதியுமாக காட்சி அளிக்கிறது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். அதேபோல் இந்த மழைக்கு தாக்குப்பிடிக்காமல் தஞ்சை ராமநாதன் பஸ் நிறுத்தம் அருகே உள்ள ஒரு திருமண மண்டபத்தின் முன்பு இருந்த மரம் சாய்ந்து விழுந்தது. இதையடுத்து தொழிலாளர்கள் அந்த மரத்தை வெட்டி அப்புறப்படுத்தினர்.

மழைஅளவு

தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பதிவான மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:-

அதிராம்பட்டினம்-42.8, கும்பகோணம்-63, பாபநாசம்-61, தஞ்சை-30, திருவையாறு-5.50, திருக்காட்டுப்பள்ளி-49.2, வல்லம்-2, கல்லணை-53.8, அய்யம்பேட்டை-55, திருவிடைமருதூர்-66.8, மஞ்சலாறு-70.2,

நெய்வாசல்தென்பாதி-49.2, பூதலூர்-23.6, வெட்டிக்காடு-47.2, ஈச்சன்விடுதி-46, ஒரத்தநாடு-33.2, மதுக்கூர்-87.2, பட்டுக்கோட்டை-70, பேராவூரணி-66, அணைக்கரை-100.4, குருங்குளம்-6.

தஞ்சை மாவட்டத்தில் சராசரியாக 48.96 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது.

**நெல்லை மாவட்டத்தில் தொடர் மழை**



நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதியில் மழை நீர் சூழ்ந்தது.

தொடர் மழை

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள குறைந்தழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த சில நாட்களாக தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது.

ஆங்காங்கே கனமழை பெய்தது. பாபநாசம் அணை பகுதியில் 42 மி.மீட்டர் மழை பெய்தது. நேற்று காலையும் நெல்லை மாவட்டத்தில்

மழை தொடர்ந்தது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது.

நெல்லையில் நேற்று காலையில் இருந்து லேசான மழை தூறிக் கொண்டே இருந்தது. இதனால் தாழ்வான இடங்களில் மழை வெள்ளம் சூழ்ந்தது. சில இடங்களில் மரக்கிளைகள் முறிந்தன. மழை தொடர்ந்து பெய்தது.

மழை அளவு விவரம்

நெல்லை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்) வருமாறு:-

நெல்லை- 7

பாளையங்கோட்டை - 19

கடையநல்லூர் - 2

சேரன்மாதேவி - 21.6

மணிமுத்தாறு - 16.2

நாங்குநேரி - 19

பாபநாசம் - 42

ராதாபுரம் - 11.2

சங்கரன்கோவில் - 10

# திருவள்ளூர் மாவட்டத்தில் மழை அளவு விவரம்



திருவள்ளூர்,
திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவில் இருந்தே பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

(அளவு மில்லி மீட்டரில்)

ஊத்துக்கோட்டை– 10, பொன்னேரி– 32, கும்மிடிப்பூண்டி–11, திருத்தணி– 12, திருவள்ளூர்– 15, பூந்தமல்லி– 32, அம்பத்தூர்– 26, பூண்டி– 14, செம்பரம்பாக்கம்– 120, சோழவரம்– 37, ஆர்.கே.பேட்டை– 37, செங்குன்றம்– 30.

காஞ்சீபுரம் மாவட்டத்திலும் நேற்று முன்தினம் இரவு முதலே பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

**திருப்பூர் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி**



திருப்பூர்,

திருப்பூர் மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>பரவலாக மழை</u>

திருப்பூர் மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களுக்கு முன் கடுமையான வெயில் வாட்டி வதைத்தது. அக்னி நட்சத்திரம் தொடங்கியதால் வெயிலின் கொடுமை கடுமையாக இருக்கும் என்று மக்கள் அச்சமடைந்தனர். ஆனால் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் முதல் வெயிலின் தாக்கம் குறைந்தது. மாலை நேரங்களில் சாரலுடன் மழை பெய்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை தொடர்ந்து மழை பெய்தது. மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. தொடர்ந்து மழை பெய்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

நேற்று முன்தினம் பெய்த மழை அளவுப்படி, அவினாசியில் 10 மில்லி மீட்டரும், திருப்பூரில் 25.6 மில்லி மீட்டரும், உடுமலையில் 36 மில்லி மீட்டரும், பல்லடத்தில் 19 மில்லி மீட்டரும், தாராபுரத்தில் 47.5 மில்லி மீட்டரும், காங்கேயத்தில் 15 மில்லி மீட்டரும், மூலனூரில் 48 மில்லி மீட்டரும் என மொத்தம் மாவட்டம் முழுவதும் 201.70 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சராசரியாக மாவட்டத்தில் 28.81 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

திருப்பூரில் நேற்று காலை முதல் மதியம் வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் மாலையில் மழை கொட்டியது. மழை காரணமாக ரோடுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வாகன ஓட்டிகள் சிரமத்துடன் சாலைகளில் சென்றனர். திருப்பூர் மாவட்டத்தில் கோடை மழை கொட்டி வருவது விவசாயிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## மாவட்டத்தில் 2–வது நாளாக தொடர் மழை அதிகபட்சமாக உளுந்தூர்பேட்டையில் 50 மி.மீ. பதிவானது



விழுப்புரம்,

விழுப்புரம் மாவட்டத்தில் 2–வது நாளாக நேற்று தொடர்ந்து மழை பெய்தது. அதிகபட்சமாக உளுந்தூர்பேட்டையில் 50 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதனால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

<u>பலத்த மழை</u>

தென்மேற்கு வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் நேற்று முன்தினம் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை அவ்வப்போது விட்டு விட்டு பலத்த மழை பெய்தது. இரவிலும் இந்த மழை நீடித்தது.

விழுப்புரம் நகரம் மற்றும் சுற்றியுள்ள கோலியனூர், காணை, வளவனூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இரவு 10 மணி முதல் சாரல் மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை இடைவிடாமல் விடிய, விடிய தூறிக்கொண்டே இருந்தது. இடையிடையே அவ்வப்போது விட்டுவிட்டு பலத்த மழையாக கொட்டி தீர்த்தது.

<u>தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது</u>

இதனால் விழுப்புரம் நகரில் உள்ள சாலைகளில் மழைநீர், வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. விழுப்புரம் நேருஜி சாலை, விழுப்புரம்– புதுச்சேரி சாலை, சென்னை– திருச்சி தேசிய நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. சுதாகர் நகர், கே.கே.நகர் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் தண்ணீர் குளம்போல் தேங்கியது.

விழுப்புரம் புதிய பஸ் நிலையத்தில் தண்ணீர் குளம்போல் தேங்கியதால் பயணிகள் பெரிதும் சிரமப்பட்டனர். பெரும்பாலான பயணிகள் பஸ் நிலையத்திற்குள் செல்லாமல் நுழைவுவாயிலிலேயே நின்று பஸ்சில் ஏறிச்சென்றனர். அதுபோல் கீழ்ப்பெரும்பாக்கம் ரெயில்வே சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்கியதால் விழுப்புரத்தில் இருந்து காகுப்பம், கீழ்ப்பெரும்பாக்கம், பொய்யப்பாக்கம், எருமனந்தாங்கல், அணிச்சம்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு செல்லக்கூடிய பஸ் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

<u>2–வது நாளாக....</u>

இந்த மழை நேற்றும் 2–வது நாளாக நீடித்தது. விழுப்புரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் காலை 8 மணி முதல் மழை பெய்ய ஆரம்பித்தது. இந்த மழை பலத்த மழையாக பெய்யாமல் மாலை 6 மணி வரை அவ்வப்போது விட்டுவிட்டு சாரல் மழையாக தூறிக்கொண்டே இருந்தது. இதனால் பொதுமக்கள் சாலைகளில் குடைபிடித்தபடி நடந்து சென்றனர்.

திண்டிவனம், கூட்டேரிப்பட்டு, மயிலம், ஒலக்கூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று காலை முதல் சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. மாலை 4 மணியளவில் பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது. இந்த மழை இடைவிடாமல் 45 நிமிடத்திற்கும் மேலாக கொட்டி தீர்த்தது. இதனால் திண்டிவனம் நேருஜி சாலை, செஞ்சி சாலை, புதுச்சேரி சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளான வகாப் நகர், மரக்காணம் சாலை இந்திரா நகர் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் குளம்போல் தேங்கியது.

உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள களமருதூர், எறையூர், மேப்புலியூர், செங்குறிச்சி, ஆரியநத்தம், பாதூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் நேற்று காலை முதல் மாலை வரை பரவலாக மழை பெய்தது. பலத்த மழையாக பெய்யாமல் சாரல் மழையாகவே தூறிக்கொண்டிருந்தது. இதேபோல் விக்கிரவாண்டி, செஞ்சி, மேல்மலையனூர், திருக்கோவிலூர், திருவெண்ணெய்நல்லூர், மரக்காணம் உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்திலேயே அதிகபட்சமாக உளுந்தூர்பேட்டையில் 50 மில்லி மீட்டர் மழை பதிவானது. கடந்த சில மாதங்களாக வெப்பத்தின் தாக்கத்தினால் கடும் அவதிப்பட்டு வந்த மக்கள் தற்போது பெய்து வரும் தொடர் மழையினால் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மழை அளவு

விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–

உளுந்தூர்பேட்டை– 50 மி.மீ.

கள்ளக்குறிச்சி– 43 மி.மீ.

திண்டிவனம்– 38 மி.மீ.

வானூர்– 32 மி.மீ.

விழுப்புரம்– 31 மி.மீ.

செஞ்சி– 24 மி.மீ.

சங்கராபுரம்– 17 மி.மீ.

திருக்கோவிலூர்– 15 மி.மீ.

மரக்காணம்– 10 மி.மீ.

மொத்த மழை அளவு– 260 மி.மீ.

சராசரி மழை அளவு– 28.89 மி.மீ.

**கள்ளக்குறிச்சி பகுதியில் 2–வது நாளாக இடி– மின்னலுடன் பலத்த மழை நெற்பயிர்கள் சேதம்**



மூங்கில்துறைப்பட்டு

கள்ளக்குறிச்சி பகுதியில் 2–வது நாளாக இடி– மின்னலுடன் பெய்து வரும் பலத்த மழையால் நெற்பயிர்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

இடி–மின்னலுடன் மழை

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் அடித்து வந்தது. இதனால் பொது மக்கள் பெரும் அவதி அடைந்தனர். இந்த நிலையில்

கள்ளக்குறிச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. மழை விட்டு விட்டு தொடர்ந்து பெய்து கொண்டே இருந்ததால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மேலும் தேர்தலில் வாக்குப்பதிவும் மந்தமாக இருந்தது. இந்த நிலையில் கள்ளக்குறிச்சி பகுதியில் 2–வது நாளாக நேற்றும் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. அதிகாலையில் பெய்ய தொடங்கிய மழை நேரம் செல்ல செல்ல அவை பலத்த மழையாக பெய்தது. முக்கிய சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் தாழ்வான இடங்களில் மழை நீர் குளம் போல் தேங்கி நின்றது. இரு சக்கர வாகன ஓட்டிகள், பாதசாரிகள் அனைவரும் மழையில் நனைந்தபடியே சென்றதை காணமுடிந்தது.

<u>நெற்பயிர்கள் சேதம்</u>

இதேபோல் மூங்கில்துறைப்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து 2 நாட்களாக மழை பெய்ததால், மூங்கில்துறைப்பட்டு, சவரியார்பாளையம், பழையூர், இளையாங்கன்னி உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்திருந்த வயலுக்குள் மழை நீர் புகுந்தது. இதனால் நெற்பயிர்கள் அனைத்தும் வயலில் சாய்ந்து சேதமடைந்தன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:– திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் மூலம் மூங்கில்துறைப்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் உள்ள 15–க்கும் மேற்பட்ட ஏரி, குளங்கள் முழுமையாக நிரம்பியது. இதையடுத்து அந்த தண்ணீரை பயன்படுத்தி என்னை போன்ற விவசாயிகள் பலரும் நெல் சாகுபடி செய்தனர். அந்த பயிர்கள் நன்கு வளர்ந்து வந்தது. இதனால் இந்தாண்டு நல்ல வருமானம் கிடைக்கும் என்று விவசாயிகள் பலரும் எதிர்பார்த்து இருந்தனர்.

<u>நஷ்டம்</u>

இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக பெய்த பலத்த மழை காரணமாக, மூங்கில்துறைப்பட்டு, சவேரியார்பாளையம், இளையாங்கன்னி, பழையூர் உள்பட பல்வேறு கிராமங்களில் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாயிகள் சாகுபடி செய்திருந்த நெற்பயிர்கள் அனைத்தும் தற்போது மழையில் சாய்ந்து சேதமடைந்துள்ளது.

இதன் மூலம் எங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். சங்கராபும் பகுதியில் இடைவிடாமல் பெய்த சாரல் மழையால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை அனைத்து தரப்பு மக்களும் வீட்டுக்குள்ளேயே முடங்கினர். இதனால் சங்கராபுரத்தில் உள்ள முக்கிய சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டது.